763

உ

# மான்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்.

ப. கிருஷ்ணசாமி சாஸ்திரியாரால்
தமிழில் பிரசுரம் செய்தது.

கிருஷ்ண விலாஸ் பிரஸ், மதுரை,
1918.

[அணா ஒன்று.

2459
954



# மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள்.

## 1-வது அனுபந்தம்.

(இவ்வனுபந்தத்தில் பிரேரணைகளைச் சுருக்கமாகக் காட்டியிருக்கிறது. அங்கங்கே குறித்திருக்கும் பாராக்களைப் பார்த்தால் தான் பூரணமும் விளங்கும். இன்னின்ன பாராக்கள் என்று சொல்லியிருப்பதில் அந்தந்த பாராக்களின் சாராம்சத்தை சில இடங்களில் எடுத்தெழுதியிருக்கிறது.)

### பார்லிமெண்டும் இந்தியா மந்திரி ஆபீசும்.

1. பார்லிமெண்டுடையவும் இந்தியா மந்திரியுடையவும் அதிகாரம் மாற்றப்படவேண்டும். 291, 293 (இதுவரையில் பணச்செலவு செய்யும் விஷயமாய் இந்தியா கவர்ன்மெண்டார் பார்லிமெண்டுக்கும் இந்தியா மந்திரிக்கும் உட்பட்டிருந்ததில் சில விஷயங்களில் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் அதிகாரங்கள் கொடுக்கப்படுவதால் இது அவசியமாக ஏற்பட்டது. இதன் விபரம் இன்னும் சொல்லப்படவில்லை)

2. இந்தியா மந்திரியின் சம்பளம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் கொடுக்கவேண்டும். 294

3. காமன்ஸ் சபையார் இந்தியா விஷயங்களை கவனிப்பதற்குத் தங்களில் சிலரை ஒரு கமிட்டியாக ஏற்படுத்தவேணுமாய்க் கேட்டுக்கொள்ள வேண்டியது. 295

(காமன்ஸ் சபையார் எல்லோருமே இந்தியா விஷயங்களை கவனிப்பது அசாத்தியமானபடியால் காமன்ஸ் சபை கூடும் ஒவ்வொரு சமயத்திலும் ஒரு கமிட்டி ஏற்படுத்தல்.)

2 V2:515N19 N18



4. இந்தியாமந்திரி சபையின் தற்கால அமைப்பைப்பற்றியும் இந்தியா ஆபீசு சிப்பந்திகளைக் குறித்தும் பரிசீலனை செய்து ரிப்போர்ட்டுச் செய்ய ஒரு கமிட்டி நியமிக்கவேண்டும். 293

## இந்தியா கவர்ன்மெண்டு.

5. சமாதானமும் ஒழுங்கும் நிலைத்திருக்கவும், நல்ல ஆட்சி நடத்தவும், வேண்டிய தங்கள் பொறுப்புக்கு அவசியமென்று இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானிக்கும் விஷயங்களில் நிராக்ஷேபணையான அதிகாரத்தை அவர்கள் வைத்துக்கொள்ளவேண்டியது. 266.

6. இந்தியாவிற்கு ஒருபிரிவிகவுன்சில் ஏற்படுத்த வேண்டும். 287

(உத்தியோகஸ்தர்கள், அல்லாதவர்கள் இந்தியாவிலோ அல்லது தேச சமஸ்தானங்களிலோ உள்ளவர்களை ஆயுசு பரியந்தம் பிரிவி கவுன்சிலர்களாக சக்ரவர்த்தியவர்கள் நியமிக்கலாம். இவர்கள் "கனம்" என்ற பட்டத்தை வகிக்கலாம். ராஜரீக சங்கதிகளைக் குறித்து இவர்களை ராஜப் பிரதிநிதி அவசியமானபொழுது யோசனை கேட்கலாம்.)

## நிர்வாக சபை.

7. ராஜப் பிரதிநிதியின் நிருவாக சபையில் இப்பொழுதிருப்பதைவிட அதிக இந்தியரை நியமித்தல். 378

(இப்பொழுது ஒரு இந்தியர் இருக்கிறார். இரண்டு இந்தியர்கள் இருக்கவேண்டும்)

8. நிர்வாஹ சபையில் இவ்வளவு பேருக்கதிகம் இருக்கக்கூடாதென்றும், இன்னயோக்யதையுள்ளவர்கள் தான் இருக்கலாமென்றும் விதிக்கும் சட்டத்தை மாற்றிசெய்யவேண்டியது. 271

12/126

9. பிரிட்டனில் (சீமையில்) பார்லிமெண்டு உதவி மந்திரிகள் இருப்பது போல சட்ட சபை மெம்பர்களில் சிலரை நியமிக்க அதிகாரம் கொடுக்கவேண்டும். 273

சட்ட சபை.

10. இப்பொழுதிருக்கும் ராஜப்பிரதிநிதி சட்டசபைக்கு பதிலாக சட்ட சங்கமொன்றும் ராஜாங்க சபை ஒன்றும் ஏற்படுத்தவேண்டும். 273—278

11. ராஜாங்க சபையில் அக்ராசனாதிபதியான ராஜப்பிரதிநிதியைத்தவிர 50 பேர்கள் இருக்கவேண்டும். ராஜப்பிரதிநிதி உப அக்ராசனாதிபதியாக ஒருவரை நியமிக்கலாம். 50-ல் 21-பேர்கள் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். 29-பேர்கள் ராஜப்பிரதிநிதியால் நியமிக்கப்படவேண்டும். நியமிக்கப்படுகிறவர்களில் 4-பேர்கள் உத்தியோகஸ்தரல்லாதவர்களாயிருக்கவேண்டும். நிர்வாக சபை மெம்பர்களுள்பட உத்தியோகஸ்தர்கள் 25-பேர்களுக்கு அதிகமாக இருக்கக்கூடாது. 2[illegible]

ஒவ்வொரு ராஜாங்க சபையும் 5-வருஷங்களுக்கொருதரம் புதிதாய் அமைக்கப்படவேண்டும். 278

ராஜாங்கசபை மெம்பர்களாவதற்கு இன்னயோக்யதை வேண்டுமென்பதற்கு நிபந்தனைகள் ராஜப்பிரதிநிதி செய்யவேண்டியது. 278

12. சட்டசங்கத்தில் சுமார் 100-மெம்பர்களிருக்கவேண்டும் அதில் மூன்றில் இரண்டு பங்கு மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டும். மீதம் மூன்றில் ஒரு பங்கு மெம்பர்கள் நியமிக்கப்படவேண்டும். நியமிக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் உத்தியோகஸ்தர்களல்லாதவர்களாக இருக்கவேண்டும். 273

சங்கத்தின் அக்கிராசனாதிபதியை ராஜப்பிரதிநிதி நியமிக்க வேண்டியது. 275

13. ராஜாங்க சபையிலுள்ள உத்தியோகஸ்த மெம்பர்களையும் சட்ட சங்கத்திற்கு மெம்பர்களாக நியமிக்கலாம். 277

*14. ராஜாங்க சபையையாவது சட்ட சங்கத்தையாவது கலைத்துவிட ராஜப்பிரதிநிதிக்கு அதிகாரமுண்டு. 286

15. சட்டம் செய்வதில் அடியிற்கண்ட முறைப்படி செய்ய வேண்டியது. 279—283

A. சர்க்கார் மசோதாக்கள். சாதாரணமாக சட்ட சங்கத்தில் கொண்டுவந்து வழக்கம்போல் நடத்தப்படவேண்டியது. சட்ட சங்கம் அங்கீகரித்துவிட்டால் ராஜாங்க சபைக்கு அனுப்பவேண்டியது. சட்ட சங்கம் அங்கீகரிக்க முடியாத விதமாக ராஜாங்க சபையார் அந்த மசோதாவை திருத்துவார்களானால் இரண்டு சபைகளையும் பொதுக்கூட்டத்தில் ஆலோசிக்கவேண்டியது. ஆனால் சமாதானம், ஒழுக்கம், நல்ல ஆட்சி இவைகளை உத்தேசித்து ராஜாங்க சபை சொன்ன மாறுபாடுகள் அவசியமென்று ராஜப்பிரதிநிதி சொல்லிவிட்டால் அவ்வித மாறுபாடுகளை நிராகரிக்கவாவது மாற்றவாவது சட்ட சங்கத்திற்கு அதிகாரமில்லை. ஒரு மசோதா கொண்டுவர அனுமதி கொடுபடாதபோனாலாவது அல்லது அனுமதி கொடுத்த பின் எந்த சமயத்திலாவது தன்னுபடியானாலும் மேலே சொன்ன காரணங்களுக்குள்பட்டிருக்கிறது. (சமாதானம் ஒழுக்கம், நல்ல ஆட்சி சம்பந்தப்பட்டது) என்று ராஜப்பிரதிநிதி சொன்னால் அதை மறுபடியும் ராஜாங்க சபைக்குக் கொண்டுவரலாம்

அவசர சமயங்களில ராஜப் பிரதிநிதி அவ்விதம் சொன்னால் ராஜப் பிரதிநிதி ஒரு மசோதாவை ராஜாங்க சபையிலேயே முதலில் கொண்டுவந்து சட்டமாகச் செய்ய அதிகாரமுண்டு. அவ்விதம் செய்ததாக சட்ட சங்கத்திற்கு தெரிவித்தால் போதும். 279

15. சர்க்காருடையதல்லாத மசோதாக்கள் கொண்டுவரும் மெம்பர் அதை தான் மெம்பராயுள்ள சபையில் கொண்டுவரவேண்டும். அந்த சபை ஏற்றுக்கொண்ட பின்பேரில் மற்ற சபைக்கு அனுப்பப்படவேண்டும். இருசபைகளுக்குள் அபிப்பிராயபேதம் ஏற்பட்டால் அதை இருசபைகளுடையவும் பொதுக்கூட்டத்தில் தீர்த்துக்கொள்ளவேண்டியது. ஆனால் சட்டசங்கமானது ஒரு மசோதாவை ஒப்புக்கொண்ட பிறகு அது பொது சாவதானத்திற்குக் குறைவென்று கவர்மெண்டார் அபிப்பிராயப்படும் பக்ஷத்தில் ராஜப் பிரதிநிதி அவ்வாறு சொல்லி அதை முதலிலேயேயாவது அல்லது மறுபடியுமாவது ராஜாங்க சபைக்கு அவ்விதம் சொல்லி யனுப்ப ராஜப் பிரதிநிதிக்கு அதிகாரமுண்டு. ராஜாங்க சபை ஒப்புக்கொள்ளும் விதமாகத் தான் அது சட்டமாகும். 280

16. தீர்மானங்கள் சிபார்சுகளாகமட்டும் தான் பாவிக்கப்படும்.

17. ஒரு சட்டத்தை அங்கீகரிக்கவும் நிராகரிக்கவும் ராஜப் பிரதிநிதிக்கும் சக்கிரவர்த்திக்கும் இப்பொழுதுள்ளதுபோலவே அதிகாரமுண்டு 283

18. ராஜப் பிரதிநிதிக்கு இப்பொழுதுள்ளதுபோல (6 மாதத்திற்கு ஊர்ஜிதத்திலிருக்கக்கூடியதும் அவசர நிமித்தம் செய்யப்படுகிறதுமான ஆர்டினன்ஸ்) சட்டம் செய்யவும் ராஜப் பிரதிநிதி சபைக்கு [illegible] என்றும் சட்டத்தை செய்யவும் அதிகாரமிருக்கவேண்டும். 276, 283.

19. ராஜப் பிரதிநிதி தடுத்தாலொழிய ராஜாங்க சபையிலும் சட்ட சபையிலுமுள்ள நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்த மெம்பர்களுக்கு தங்களிஷ்டப்படி பேசவும் வோட் கொடுக்கவும் சுதந்தரமுண்டு 275

20. ராஜாங்க சபை அல்லது சட்ட சபையின் எந்த மெம்பரும் மேல் கேள்விகள் கேட்கலாம்.

ஒரு கேள்விக்கு பதில் சொல்வதானது பொதுஜன சமாதானத்திற்கு ஹானியென்ற காரணத்தைக்கொண்டு அதற்கு பதில் சொல்ல முடியாதென்று அக்கேள்வியை கேட்கக்கூடாதென்று ராஜப் பிரதிநிதி சொல்லக்கூடாது. ஆனால் அந்தக் கேள்வியை கேட்பது பொதுஜன நன்மைக்குப் பொருத்தமல்லவென்று அக்கேள்வி கேட்கக்கூடாதென்று ராஜப் பிரதிநிதி சொல்ல அதிகாரமுண்டு.
236, 286.

21. ராஜாங்க சபையிலும் சட்ட சங்கத்திலும் நடவடிக்கைகள் நடத்தவேண்டிய முறையைக்குறித்து முதலில் ராஜப்பிரதிநிதி சபையார் விதிகள் ஏற்படுத்தவேண்டும். ராஜப்பிரதிநிதியின் சம்மதத்திற்குட்பட்டு தங்கள் தங்களுக்குள்ள விதிகளை மாற்றிக்கொள்ள ராஜாங்க சபைக்கும் சட்ட சங்கத்திற்கும் அதிகாரமுண்டு. அவ்விதமாறுதல்களை இந்தியா மந்திரி அனுமதிக்கவேண்டுமென்பதில்லை. பார்லிமெண்டார் ஒப்புக்கொள்ளவேண்டுமென்பதுமில்லை. 286

22. கூடுமானவரை கவர்மெண்டின் இலாகாக்களில் ராஜாங்க சபையுடையவும் சட்ட சங்கத்தினுடையவும் பொது நிரந்தரக் கமிட்டிகள் சம்பந்தப்பட்டிருக்கவேண்டும். எந்த இலாகாக்களில் நிரந்தர கமிட்டிகளை சம்பந்தப்படுத்தலாமென்று ராஜப்பிரதிநிதி தீர்மானிக்கலாம். நிரந்தர கமிட்டிக்கு எந்த விஷயங்களை அனுப்பலாமென்று அந்த இலாகா தலைவர் தீர்மானிக்கலாம். ஒவ்வொரு நிரந்தர கமிட்டியிலும் மூன்றில் இரண்டு பங்கு மெம்பர்கள் ராஜாங்க சபை சட்டசங்கம் இவைகளின் உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டும். மூன்றில் ஒரு பங்கு மெம்பர்களை ராஜப்பிரதிநிதி சபை நியமிக்கவேண்டும்.

23. இந்தியா கவர்ன்மெண்டார் செய்யக்கடமைப்பட்ட காரியங்களுக்கு இடையூறின்றி சட்டசம்பந்தமான விஷயங்களிலும், நிர்வாகம், பணம் சம்பந்தமான விஷயங்களிலும் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு இந்தியா கவர்ன்மெண்டு முதலானவர்களுடைய மேலதிகாரமில்லாமல் ஏராளமான சுதந்திரம் கொடுக்கவேண்டும். 189

24. மாகாணங்களில் முதல் முதல், இனி மாற்றப்பட்ட விஷயங்கள் என்று சொல்லப்படும், சில விஷயங்களில் மட்டும் ஜவாப்தாரியான ராஜாங்கம் ஆரம்பிக்கப்படும் (மற்ற விஷயங்கள் எல்லாம் (ரிசர்வட்) ஒதுக்கப்பட்ட விஷயங்கள் எனப்படும்) சிறுக படிப்படியாய், பூறுவும் பொறுப்புள்ள ஆட்சி வரும் வரை, மாற்றப்பட்ட விஷயங்களை அதிகப்படுத்தப்படும். 215, 218, 219, 238, 260.

## மாகாண நிர்வாக சபைகள்.

25. ஒரு மாகாணத்தின் நிர்வாக கவர்ன்மெண்டானது ஒரு கவர்னரும் ஒரு நிர்வாகசபையும், அம்மாகாணத்து சட்டசபையின் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களிலிருந்து கவர்னரால் நியமிக்கப்பட்ட ஒரு மந்திரி அல்லது மந்திரிகளும், பின்னும் குறிப்பிட்ட வேலை கொடுக்கப்படாத ஒரு மெம்பர் அல்லது மெம்பர்களும் அடங்கியதாக இருக்கவேண்டியது. 214, 218, 220.

26. நிர்வாக சபையில் இரண்டு மெம்பர்கள் இருக்கவேண்டும். அவ்விருவர்களில் ஒருவர் இந்தியராயிருக்க வேண்டும் 218.

(ரிசர்வட்) ஒதுக்கப்பட்ட விஷயங்கள் கவர்னருடையவும் நிர்வாக சபையின் மெம்பர்களுடையவும் பார்வையிலேயே இருக்கவேண்டும். 218

27. (கவர்னரால்) நியமிக்கப்பட்ட மந்திரி அல்லது மந்திரிகள் சட்டசபை மெம்பர்கள் எவ்வளவு காலத்திற்கு ஸ்தானம் வகிக்

இருக்கிறாரோ அவ்வளவு காலத்திற்கு நியமிக்கப்படுவார்கள். மாற்றப் பட்ட விஷயங்கள் அவர்கள் வசம் ஒப்புவிக்கப்படும். 218, 219

28. நிருவாக சபைக்கு கவர்னரால் நியமிக்கப்படும் அதிகப் படி மெம்பர் அல்லது மெம்பர்கள், அவர்களுடைய யோசனைக் கேட்பதற்காகமட்டும், நீடித்த உத்தியோகம் வகித்த உத்தி யோகஸ்தர்களிலிருந்து கவர்னரால் நியமிக்கப்படுவார்கள். 220

29. இவ்வாறமைக்கப்பட்ட கவர்மெண்டில் சாதாரணமாக எல்லாருமே சேர்ந்து யோசனை செய்யவேண்டியது. ஆனால் கவர் மெண்டில் எதாவது ஒரு பாகத்தைமட்டிலும் கூப்பிட்டு அத்துடன் மட்டில் தனித்து யோசனை செய்ய கவர்னருக்கு அதிகாரமுண்டு. ரிசர்வட் ஒதுக்கப்பட்ட விஷயங்களைக் குறித்து தீர்மானிப்பதும் அவைகளுக்கு மாகாண வரவுசிலவு திட்டத்தில் ஏற்பாடுசெய்வதும் கவர்னரையும் அவருடைய நிருவாக சபையையும் சேர்ந்தது மாற் றப்பட்ட விஷயங்களைகுறித்து தீர்மானம் செய்வதும் அவைகளுக்கு (வரவுசிலவு திட்டத்தில்) ஏற்பாடு செய்வதும் கவர்னரையும் மந்திரி களையும் சேர்ந்தது. 219, 221

30. பிரிட்டிஷ் பார்லிமெண்டில் உதவி மந்திரிகளுடைய ஸ்தானத்தை யொத்தஸ்தானத்தை வகிப்பவர்களாய் சட்ட சபை யின் மெம்பர்களில் ஒரு குறிப்பிட்டதொகை மெம்பர்களை நியமிக்க அதிகாரமிருக்கவேண்டும். 221

### மாகாண சட்ட சபைகள்.

31. ஒவ்வொரு மகாணத்திலும் இப்பொழுதிருப்பதைக்கா ட்டிலும் அதிக மெம்பர்களுள்ளவைகளும் ஜனங்களால் தெரிந்தெ டுக்கப்படும் மெம்பர்கள் தாராளமாகவே ஜாஸ்தியாயுள்ளதுமான சட்டசபைகள் ஏற்படுத்தப்படவேண்டும். சட்டசபையில் அடியில் கண்ட விதமாய் ஸ்தானம் பெறலாம் (1) தெரிந்தெடுக்க லாயக்கு

ள்ளவர்களின் தகைமை கூடியமட்டில் ஜசல் திபன்ணினதினுல் ஏற்படும் வோட்டர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் (2) நியமிக்கப்பட்ட மெம்பர்கள் இதில் (a) உத்தியோகஸ்தர்கள் (b) உத்தியோகஸ்தரல்லாதவர்கள். ஆக இரண்டு வகை. (3) உத்தியோக முறையிலேயே மெம்பர்களாயுள்ளவர்கள். வோட்டுக்கொடுக்கும் லாயக்கும் சட்ட சபைகளின் அமைப்பும் இந்திய மந்திரியின் அனுமதி பெற்றதும் பார்லிமெண்டில் ஆஜர்படுத்தப்பட்டதும். ரிபோர்ட்டின் 53வது பாராவில்கண்ட கமிட்டியின் யோசனையின் பேரில் ராஜப்பிரதிநிதி சபையாரால் செய்யப்படவேண்டியதுமான விதிகளால் தீர்மானிக்கப்படும். 225, 232, 233

32. சட்டசபைக்கு கவர்னர் அக்கிராசனதிபதியாய் இருக்கவேண்டும். ஒரு உப அக்கிராசனதிபதியை நியமிக்க அவருக்கு அதிகாரமுண்டு. 236

33. சட்டசபையை கலைத்துவிட கவர்னருக்கு அதிகாரமுண்டு. 251

34. வரவு செலவு திட்டம் சம்பந்தப்பட்டவைகளைத் தவிர மற்ற தீர்மானங்கள் சிபார்சுகளாக மட்டிலும் கருதப்படும். 237

35. நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்த மெம்பர்களுக்கு கவர்மெண்டார் மறுத்தாலொழிய தங்களிஷ்டப்படி பேசவும் வோட்டுக்கொடுக்கவும் அதிகாரமுண்டு. 233

36. சட்ட சபையின் எந்த மெம்பருக்கும் தான் கேட்ட கேள்விகளை ஒட்டின உப கேள்விகள் கேட்க அதிகாரமுண்டு 236

37. சட்ட சபையில் காரியாதிகள் நடப்பதைப்பற்றி இப்பொழுதிருக்கும் விதிகளே வர்ஜிதத்திலிருக்கவேண்டியது. ஆனுல் அதுகளை கவர்னருடைய அனுமதியுடன் மாற்ற சட்ட சபைக்கு அதிகாரமிருக்கவேண்டியது. 236

38. ஒவ்வொரு இலாகாவிற்குமோ அல்லது பல இலாகாக்களைச் சேர்த்து அதிகளுக்குமோ சம்பந்தப்பட்டவைகளாக சட்ட சபையின் ஸ்தாந்தர கமிட்டிகள் ஏற்படுத்தவேண்டும். அவ்வித கமிட்டிகள் சட்ட சபையால் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும் அந்தந்த இலாகா தலைவரும், அந்த இலாகா மெம்பர் அல்லது மந்திரியும் அடங்கியவைகள். மெம்பர் அல்லது மந்திரி கமிட்டிக்கு அக்கிராசனம் வகிப்பார் 235

39. சாதாரணமாக எல்லா விஷயங்களைப் பற்றியும் சட்ட சபையிலேயே சட்டங்கள் செய்யவேண்டும். பின் வரும பாராக்களில் விசேஷமுறை சொல்லப்பட்டிருக்கிறது 232

40. மாகாணத்தினுடையவோ அல்லது அதன் ஒரு பாகத்தினுடையவோ சமாதானத்திற்காக (ரிசர்வட்) ஒதுக்கப்பட்ட விஷயங்கள் என்று சொல்லப்பட்ட விஷயங்களைக் குறித்து ஒரு மசோதா கொண்டுவரவேண்டியது அவசியமென்றாவது அல்லது (ரிசர்வட்) ஒதுக்கப்பட்ட விஷயங்களைக் குறித்து தனக்கிருக்கும் பொறுப்பு சம்பந்தமாய் ஒரு மசோதா அவசியமென்றாவது கவர்னருக்கு உறுதிகூற அதிகாரமிருக்கவேண்டும். அதன்பேரில் அந்த மசோதா அவ்வித உறுதியுடன் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். அதை சட்ட சபையில் கொண்டுவந்து வாசிக்கப்படும். சட்ட சபையில் அதன் பொது அம்சங்களைப்பற்றி விவாதம் நடந்த பிறகு அது ஒரு பெரிய கமிட்டியின் யோசனைக்கு அனுப்பப்படும். ஆனால் ஒதுக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தப்பட்டதென்று கவர்னர் உறுதிகூறினது சரியாவென்பதைப்பற்றி இந்தியா கவர்மெண்டாருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளவேணுமாய் சட்ட சபை கவர்னரை கேட்க அதிகாரமுண்டு. இந்தியா கவர்மெண்டார் பார்வையிட்டுச் செய்யும் தீர்மானம் முடிவானதாயிருக்கும்.

சட்ட சபையிலேயே ஒரு மசோதாவை ஆலோசனை செய்து தீர்மானத்துக்குக் கொண்டுவருவதினால் பாதகம் இல்லை என்று கவர்னர் அபிப்பிராயப்படும் பக்ஷத்தில் அவ்வித மசோதாவைப் பற்றி கவர்னர் (அவசியமென்ற) உறுதிசொல்லவேண்டியதில்லை. 252

41. பெரிய கம்மிட்டி என்று சொன்னது சட்ட சபையின் 100-க்கு 40 முதல் 50 வரை வீதம் உள்ள மெம்பர்களடங்கியது. மசோதாவின் விஷயத்தின் தன்மையைப் பொருத்து அதன் மெம்பர்களின் தொகை கூட்டவோ குறைக்கவோ செய்யும். அந்த கம்மிட்டியின் மெம்பர்களில் ஒரு பங்கு தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் மீதம் பங்கு நியமிக்கப்பட்டவர்கள். தன்னைத் தவிர மீதமுள்ள மெம்பர்களில் மெஜாரிட்டி தன் பக்கமாக இருக்கும்படி நியமிக்க கவர்னருக்கு அதிகாரமுண்டு. ஆனால் நியமிக்கப்பட்ட மெம்பர்களில் உத்தியோகஸ்த மெம்பர்கள் மூன்றில் இரண்டு பங்கிற்கதிகம் இருக்கக் கூடாது.

42. ஒரு மசோதாவை பெரிய கமிட்டி நிறைவேற்றின பிறகு அதை சட்டசபைக்கு கொண்டுவரவேண்டும். சட்டசபை அதைக்குறித்து இனிமேல் திட்டம் செய்யப்படும் ஒரு கால அளவுக்குள் பொதுவாக விவாதம் செய்யலாம். நிருவாக சபை மெம்பரொருவர் கேட்டுக்கொண்டாலொழிய அம்மசோதாவில் சட்ட சபை மாறுபாடுகள் செய்யக்கூடாது. அதைச் சட்டசபை தள்ளிவிடக்கூடாது. அவ்வித விவாதத்திற்குப் பிறகு அம்மசோதா தானாகவே சட்டமாய் விடும். ஆனால் அவ்வித விவாத சமயத்தில் மசோதாவின் எந்தப்பாகத்தைக் குறித்தாவது அல்லது அதன் கருத்தைக் குறித்தாவது ஏதேனும் ஆக்ஷேபணை யிருந்தால் சட்டசபை அவ்வாக்ஷேபணையை தீர்மான ரூபமாக பதிவு செய்யலாம். அவ்வித தீர்மானத்தை நிறைவேறின சட்டத்துடன் ராஜப்பிரதிநிதிக்கும் இந்தியா மந்திரிக்கும் அனுப்பவேண்டியது. 253

43. சட்டசபையில் கொண்டு வரப்படும் எந்த மசோதாவையும் கொண்டுவரும் சமயத்திலேயே பூராவையுமோ அல்லது ஒரு பாகத்தையோ அல்லது கொண்டுவந்த பிறகு அதைக்குறித்துச் சொல்லும் எந்த திருத்தத்தையுமோ ஒதுக்கப்பட்ட விஷயங்களுக்கு சம்பந்தப்படுகிறது என்ற காரணத்தைச் சொல்லி நிருவாக சபை மெம்பர் எவரும் மறுத்துவிடலாம் அதன் பேரில் கவர்னர் அம்மசோதா சட்டசபையிலேயே நடைபெறட்டுமென்று சொல்லலாம் அல்லது அந்த மசோதாவோ அதன் ஏதேனும் ஒரு அம்சமோ அல்லது அது சம்பந்தமாய் கொண்டுவரப்பட்ட திருத்தமோ ஒதுக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தப்பட்டதென்று உறுதி கூறிவிடலாம். கவர்னர் அவ்விதம் உறுதி கூறிவிட்டால் அதை சபையில் விவாதம் செய்ய ஆக்ஷேபித்து விடலாம். அல்லது சட்டசபைக்கு திருத்தப்பட்ட ஒரு மசோதாவையோ அம்சங்களையோ சொல்லலாம் அல்லது சட்டசபை கேட்டுக்கொண்டால் ஒரு பெரிய கமிட்டிக்கு அம்மசோதாவை அனுப்பலாம், 254

44. மாகாணசட்ட சபையில் செய்யப்படும் எல்லா சட்டங்களும் கவர்னராலும் ராஜப்பிரதிநிதியாலும் அங்கீகரிக்கப்படவேண்டும் எந்த சட்டத்தையும் சக்கிரவர்த்தியவர்கள் நிராகரித்து விடலாம். 254

45. சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை நிராகரிக்கும் பொழுது அச்சட்டத்தில் திருத்தங்கள் செய்யும் பொருட்டு சட்ட சபைக்கு அதை மறுபடியும் அனுப்ப கவர்னருக்கு அதிகாரமுண்டு, 254

46 மாகாணசட்டசபைகளால் செய்யப்படும் சட்டங்களை நிறுத்திவைத்துக்கொள்ள ராஜப்பிரதிநிதிக்கு அதிகாரமுண்டு. 254

## வரவு செலவு.

47. ஒவ்வொரு மாகாணத்தின் வரும்படிகளிலும் இந்தியா கவர்மெண்டிற்கு சேர்ந்தது இவ்வளவென்றும் மகாணா கவர்மெண்டிற்குச் சேர்ந்தது இவ்வளவென்றும் வரையறை பிரித்துவிடவேண்டும். 200, 201

48 மாகாண கவர்மெண்டுகள் இந்தியா கவர்ன்மெண்டிற்கு கொடுக்கவேண்டிய தொகைகளை கொடுத்த பிறகுதான் மற்றச் செலவுகளை யோசிக்கவேண்டும் 206, 256

49, மாகாண கவர்மெண்டுகளுக்கு வரிபோடும் விஷயத்திலும் கடன் வாங்குவதிலும் சில குறிப்பிட்ட அதிகாரங்கள் இருக்கவேண்டும். 206, 256

49, மாகாண கவர்மெண்டுகளுக்கு வரிபோடும் விஷயத்திலும் கடன் வாங்குவதிலும் சில குறிப்பிட்ட அதிகாரங்கள் இருக்கவேண்டும். 210, 211

50. வரவு செலவு திட்டத்தை சட்டசபைக்கு முன் கொண்டுவரவேண்டும். ஒதுக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாயுள்ள விஷயங்களை சட்டசபை அங்கீகரிக்க மறுத்தால் பூரா மாகாணத்திலுடையவாவது அல்லது ஏதேனும் ஒரு பாகத்திலுடையவாவது சமாதானத்தின் பொருட்டாவது அல்லது ஒதுக்கப்பட்ட விஷயங்களைப்பற்றின பொறுப்பு தன்னுடையதென்பதினாலாவது முன் கொண்டுவரப்பட்ட படியே பூராவாவது அல்லது ஏதேனும் பாகமாவது இருக்கவேண்டுமென்று கவர்னர் சொன்னால் அதற்கு காரணத்தைச் சொல்லி அவ்வாறே வைத்துக்கொள்ள கவர்னருக்கும் நிருவாக சபைக்கும் அதிகாரமிருக்கவேண்டும். இந்த அதிகாரத்தை செலுத்தாதமட்டில் சட்டசபையின் தீர்மானங்களை அனுசரித்து வரவு செலவு திட்டத்தை திருத்தவேண்டும். 256

### ஸ்தல சுய ஆட்சி.

51. ஸ்தல சங்கங்களில் கூடுமான வரையில் ஜனங்களின் மேலதிகாரம் ஏற்படுத்தப்பட வேண்டும். 188

### மாகாண கவர்மெண்டின் அமைப்பில் திருத்தம்.

52. புது சபைகள் முதல் முதல் கூடினதிலிருந்து ஐந்து வருஷங்களுக்குப் பிறகு ஒதுக்கப்பட்ட விஷயங்களுடையவும் மாற்றப்பட்ட விஷயங்களுடையவும் ஜாப்தாக்களை திருத்தவேணுமாய் மாகாண கவர்மெண்டு அல்லது மாகாண சட்டசபை செய்துகொள்ளும் மனுவை இந்தியா கவர்மெண்டார் கவனிக்கவேண்டும். அப்படி நேரும் சமயங்களில் இந்தியா மந்திரியின் அனுமதியின்பேரில் ஒதுக்கப்பட்ட எந்த விஷயத்தையும் மாற்றப்பட்ட விஷயமாகச் செய்யவும் நிருவாகத்தில் பெருத்த ஊழல் ஏற்பட்டிருந்தால் ஏற்கனவே மாற்றப்பட்ட எந்த விஷயத்தையும் ஒதுக்கப்பட்ட விஷய ஜாப்தாவிற்கு மாற்றிவிடவும் இந்தியா கவர்மெண்டுக்கு அதிகாரம் இருக்கவேண்டும், பின்னும் மந்திரிகளுடைய சம்பளம் ஒவ்வொரு வருஷத்திலும் சட்ட சபையில் வோட்டின்பேரில் தீர்மானிக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவு செய்யலாம். அதே சமயத்திலாவது அதற்குப்பின்னாவது அந்தச்சம்பளமானது (மந்திரிகளின் சம்பளம்) தனித்தனியாக ஒவ்வொரு வருஷமும் வோட்டின்பேரில் தீர்மானிக்கப்படவேண்டும் என்று தீர்மானம் மூலம் முடிவு செய்ய சட்ட சபைக்கும் பாத்தியமுண்டு. 260

### முதலில் செய்யவேண்டியவைகள்.

53 இங்கிலாந்திலிருந்து நியமிக்கப்பட்ட ஒரு அக்ராசனாதிபதியும், ஒரு உத்தியோகஸ்தரும், உத்தியோகஸ்தரல்லாத ஒரு இந்தியரும் அடங்கிய ஒரு கம்மிட்டி நியமிக்கப்படவேண்டும்.

இந்த கம்மிட்டி இந்தியா கவர்மென்டின் வேலைகள் இன்னவென்றும் மாகாண கவர்மென்டின் வேலைகள் இன்னவென்றும் பிரிக்கும் விஷயத்தில் யோசனை சொல்லவும் மாகாண கவர்மென்டுக்கு கொடுத்திருக்கும் விஷயங்களில் இன்னதுதான் மாற்றப்பட்ட விஷயங்களாக இருக்கவேண்டுமென்பதைப்பற்றி சிபார்சு செய்யவும் வேண்டும். 238

54. இங்கிலாந்திலிருந்து நியமிக்கப்பட்ட ஒரு அக்கிராசனாதிபதியும், இரண்டு உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தர்களல்லாத இரண்டு இந்தியர்களும் அடங்கிய (மற்றொரு) இரண்டாவது கமிட்டியொன்று நியமிக்கப்படவேண்டும். இந்தக் கம்மிட்டி சட்ட சபையின் அமைப்பைப்பற்றியும், வோட்டுக் கொடுப்பதற்குள்ள லாயக்கைப்பற்றியும், ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள சட்ட சபையின் அமைப்பைப்பற்றியும், சட்ட சங்கத்தைப் பற்றியும பரிசிலனை செய்யவேண்டும். இந்தக் கமிட்டி எந்த மாகாணத்தைப் பற்றி பரிசீலனை செய்கிறதோ அந்த மாகாணத்திய ஒரு உத்தியோகஸ்தரையும் உத்தியோகஸ்தரல்லாத ஒரு இந்தியரையும் அந்தக் கம்மிட்டியில் அப்பொழுது சேர்த்துக்கொள்ளவேண்டியது. 225

55. மேலே சொன்ன இரண்டு கம்மிட்டிகளும் கூடிக்கலந்து யோசனை செய்ய அதிகாரம் இருக்கவேண்டும். 268

### விசாரணைக் கமிஷன்.

56. புதுச் சட்ட சபைகள் முதல் முதலில் கூடின 10-வருஷங்களுக்குப் பிறகு இந்தியா கவர்மென்டினுடையவும் மாகாண கவர்மென்டுகளுடையவும் அமைப்புகளைப்பற்றி பரிசீலனை செய்து திருத்தங்கள் செய்ய ஒரு கமிஷன் நியமிக்கப்படவேண்டும். கமிஷன் மெம்பர்களின் பெயரை பார்லிமென்டிற்குத் தெரிவித்து அனுமதி பெறவேண்டும். இம்மாதிரி கமிஷன்கள் 12-வருஷங்களுக்கு மேற்படாத காலத்திற்கு ஒரு தடவை நியமிக்கப்படவேண்டும். 261

## தேச சமஸ்தானங்கள்.

57. மன்னர்கள் சபை ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் 306

58. அந்த மன்னர்கள் சபை ஒரு நிரந்தர கம்மிட்டியை நியமிக்கவேண்டும். 307

59. தேச சமஸ்தானங்களுக்குள் ஒருவருக்கொருவராவது அல்லது ஒரு தேச சமஸ்தானத்திற்கும் மகாண கவர்மெண்டுக்கும் அல்லது இந்தியா கவர்மெண்டுக்குமாவது தகராறுகள் ஏற்பட்டால் அவ்விஷயத்தில் யோசனை சொல்ல ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜும் ஒவ்வொரு தரப்பாராலும் நியமிக்கப்பட்ட ஒவ்வொருவரும் அடங்கிய ஒரு கமிஷனை ராஜப்பிரதிநிதி தனக்கு யுக்தமென்று தோன்றினால் நியமிக்கலாம். 308

60. ஒரு சமஸ்தானாதிபதியின் இராஜ்யம் அல்லது அந்தஸ்து அல்லது பாத்தியங்களை எடுத்து விட வேண்டுமென்றாவது அல்லது அவர் குடும்பத்தில் எவராவது பட்டத்துக்கு வருவதைத் தடுத்து விடவேண்டும் என்பதான விஷயமாவது யோசனை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவ்விஷயத்தில் யோசனை சொல்ல, ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜ் இரண்டு சமஸ்தானாதிபதிகள் உயர்ந்த அந்தஸ்துள்ள இருவர்கள் அடங்கிய ஒரு கமிஷனை ராஜப்பிரதிநிதி நியமிக்கவேண்டும். 309

61. உள்நாட்டு நிர்வாகத்தில் பூரண அதிகாரமும் உள்ள எல்லா சமஸ்தானங்களும் இந்தியா கவர்மெண்டுடன் நேரிலேயே நடவடிக்கைகள் வைத்துக்கொள்ள அதிகாரமுள்ளவர்களாக இருக்கவேண்டும். 310

62. தேச சமஸ்தானங்கள் சம்பந்தமான விஷயங்களை மகாண சட்ட சபைகளுக்கு மாத்தப்படும் விஷயங்களிலிருந்து விலக்கி விடவேண்டும். 310

63. மன்னர்கள் சபைக்கும் ராஜாங்க சபைக்கும் பொதுவாயுள்ள விஷயங்களைக் குறித்து இரண்டு சபைகளும் கூடிக்கலந்து யோசனை செய்து முடிவு செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். 278—311

## சர்க்கார் உத்தியோகங்கள்

64. சர்க்கார் உத்தியோகங்களுக்கு நியமனம் செய்வதற்குள்ள விதிகளில இன்னுமிருக்கிற ஜாதி வித்தியாசங்களை நீக்கிவிடவேண்டும். 315

65. உத்தியோகங்களுக்காக இங்கிலாந்தில் ஆசாமிகளைச் சேர்ப்பதுடன் எல்லா சர்க்கார் உத்தியோகங்களுக்கும் இந்தியாவிலே நியமிக்க ஒரு ஏற்பாடு செய்யப்படவேண்டும். 316

66. இந்தியாவிலேயே சேர்க்கப்படுகிறவர்கள் நூற்றுக்கு இவ்வளவு பெயர்கள் என்பதும் அந்தத் தொகையை (வருஷத்திற்கு) இவ்வளவாக ஜாஸ்திப்படுத்தப்படும் என்பதையும் எல்லா உத்தியோகங்களுக்கும் நிர்ணயிக்கவேண்டியது.

67. இந்தியன் ஸிவில் ஸர்விஸ் என்னும் உத்தியோகத்தில் (மேலே சொன்னபடி இந்தியாவிலேயே ஆசாமிகள் சேர்ப்பது) உயர்தர உத்தியோகங்களில் 100-க்கு 33 அந்தத் தொகை வருஷா வருஷம் 100-க்கு $1\frac{1}{2}$ வீதம் 55, 56 வது பாராவில் சொன்ன கமிஷன் பரிசீலனை செய்யும் வரை அதிகப்படுத்தப்படும். 317

68. காலக்ஷேபச்செலவு அதிகப்பட்டிருப்பதையும் சேர்க்கும் ஆசாமிகளின் யோக்கியதாம்சம் குறைவாயிருக்கவேண்டியதின் அவசியத்தையும் உத்தேசித்து சம்பள திட்டத்தை மறுபடியும் யோசனை செய்யவேண்டும். பொதுவாக சம்பளம் இவ்வளவு காலத்தில் இவ்வளவு அதிகப்படுத்தப்படுமென்று ஏற்படுத்தவேண்டும் உயர்தரச் சம்பளத்தின் தொகைக்கு வரும்வரை சம்பளம் அதிகப்

பகித்தப் படவேண்டும். ஸாதாரணமாகக் கொடுபடும் பென்ஷன் ரூ. 6000-க்கு மேற்படாததாக அதிகப்படுத்தவேண்டும். அது ஒரு ரூபாய்க்கு ஒரு ஷில்லிங் ஒன்பது பென்ஸ் வீதம் கொடுபடவேண்டும். சில உயர்ந்த உத்தியோகங்களுக்கு விசேஷ பென்ஷன் கொடுபடவேண்டும். இந்தியன் ஸிவில் ஸர்விஸிலுள்ளவர்களுடைய பென்ஷன் நிமித்தம் சம்பளத்தில் ஒரு பாகத்தை எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. ஆனால் அவர்கள் கொடுக்கும் தொகையை ஒரு நிதியாக வைக்கவேண்டும். ரஜா விதிகள் அவ்வளவு கஷ்டமாக இல்லாதிருக்கும் பொருட்டு பரிசீலனை செய்யப்படவேண்டும். இப்பொழுது அதிகமாகத் தோன்றும் ரஜாவைக் குறைப்பதையும் பூர்ணசம்பளத்தில் குறைந்த ரஜா எடுத்துக்கொள்வதையும் பற்றி யோசனை செய்யவேண்டும். 4-மாதம் வரை எடுத்துக் கொள்ள லாயக்காக பிரிவிலேஜ் லீவை சேர்த்து வைத்துக்கொள்வதைப்பற்றியும் யோசனை செய்யவேண்டும். 318–321

69. எல்லா உத்தியோகங்களுக்கும் இந்தியாவிலேயே உத்தியோகஸ்தர்கள் எடுக்கப்பட்டால் இன்ன சம்பளம் கொடுப்பதென்பதற்கு ஒரு திட்டம் ஏற்படுத்தவேண்டும். ஆனால் ஐரோப்பாவில் எடுக்கப்பட்டவர்களுக்கும், ஐரோப்பாவில் விசேஷ யோக்யதை பெற்றவர்களுக்கும் விசேஷ படி கொடுக்கவேண்டும். இந்தியர்கள் ஐரோப்பாவில் உத்தியோகம் வகித்தால் அவர்களுக்கும் அதே மாதிரியாக ஏற்பாடு செய்யவேண்டும்.

---

## அனுபந்தம் II.

### மாகாண கவர்மெண்டிற்குறிய விஷயங்கள்.

### I-வது ஜாப்தா.

(212, 213. 238, 240 பாராக்கள்.)

1. மாகாண காரியங்களுக்கு வழி போடுதல். 210.

2. மாகாண வரும்படிகளின் ஜவாப்தாரியின் பேரில் கடன் வாங்கல். ஷரா 211

— 3. இந்தியா கவர்மெண்டின் வரவு, செலவு வேலையைச் செய்தல் (வருமான வரியை வசூலிப்பது போல)

ஷரா—இந்தியா கவர்மென்டார் ஏற்படுத்தக்கூடும் நிபந்தனைகளுக்கோ விதிகளுக்கோ உள்ப்பட்டு.

4. மாகாண உத்தியோகஸ்தர்களுடைய நியமனம், உத்தியோக திட்டம், மேலதிகாரம்.

ஷரா—ஸெடியார்களுக்கு இப்பொழுதிருக்கும் சுதந்தரங்களுக்குட்ப்பட்டு.

5. சட்டம் ஒழுக்கம் இவைகளின் ஸ்தாபனம்.

(i) கிராமக் கோர்ட்டுகள் உள்பட கிரிமினல் நீதி செலுத்தல்.

ஷரா—தண்டனைகளை நிறுத்திவைக்கவும் மன்னிக்கவும் இந்தியா கவர்மெண்டிற்கிருக்கும் அதிகாரம் இருக்கவேண்டும். ஹைகோர்ட்டுகளுக்கு இப்பொழுதிருக்கும் உரிமைகள் இருக்கவேண்டும். சட்டங்கள் சம்பந்தப்பட்டமட்டில் ஒரே மாதிரியாயிருக்க வேண்டும்.

(ii) ரயில்வே போலீசுள்பட போலீசு.

ஷரா—ரகசிய போலீஸிலாகா தலைவர் இந்தியா கவர்மெண்டிற்குள்ப்பட்டிருக்கவேண்டும்.

(iii) சிறைச்சாலைகள்.

(iv) குற்றம் செய்யும் ஜாதியார்கள்.

ஆறு—மாகாணங்களில் செய்யப்படும் வேலைகளை இந்திய கவர்மெண்டார் ஒன்று படுத்திவிருப்பதை ஆலோசிக்கவேண்டியிருக்கிறது

(v) சில குறிப்பிட்ட சட்டங்களை கொண்டு செலுத்தல். உதாரணமாக குற்றம் செய்யத் தூண்டுதல், ராஜ துவேஷக்கூட்டங்கள், செலுத்தி, அச்சுக்கூடங்கள், ஆயுதங்கள், பிச்சை எடுத்தல் இவையும் இவைபோன்றவைகள்.

ஆறு—சட்டம் செய்யும் அதிகாரம் இந்தியா கவர்மெண்டுக்கு இருக்கவேண்டியது. அதுகளை மாகாண கவர்மெண்டுகள் கொண்டு செலுத்தவேண்டியது

(vi) பாஷாணங்கள்

(vii) சூதாட்டம்.

(viii) நாடகம், நிழலாட்டம்.

(ix) பொது விசாரணை செய்யும் உத்தியோகஸ்தர்கள்.

6. நிலத்தீர்வை நிர்வாகம். நிலவரி ஏற்படுத்தல் வசூலித்தல், செவினியூ சிப்பந்திகள் வைத்துக்கொள்ளுதல், அவர்கள் நடக்கவேண்டியமுறை, லாண்டு ரிக்கார்டு வைத்துக்கொள்ளுதல், செவினியூ சம்பந்தமான விசேஷ சட்டங்கள், சர்க்கார் குடியானவர்கள் சம்பந்தமானவை, வரி வசூலிப்பது, கோர்ட்டு ஆப்வார்ட்ஸ், விஸ்தாரத்திற்குட்பட்ட எஸ்டேட்டுகள், நில அபிவிருத்தி, விவசாயக் கடன்கள், தீர்வையில்லாமலே கொடுக்கப்பட்ட இனுக்களை மறுபடி எடுத்துக்கொள்ளுதல், ஆற்றினால் நிலம் சேருவது அழிவது, சர்க்கார் நிலங்களை பிறருக்கு கொடுப்பது.

7. விவசாயம். கால் நடை வைத்தியம், மிருகங்களின் நோய், ஆராய்ச்சி சாலைகள், மாதிரிப் பண்ணைகள், விவசாய நோய்கள், விவசாய சம்பந்தமான கைத்தொழில்கள்.

8. காடுகளும் அவைகளின் உற்பத்தியாகும் சாமான்களும்

9. மீன்பிடிக்கும் ஸ்தலங்களும் அதுகள் சம்பந்தமான கைத் தொழில்களும். ஆற்று ஜலத்தைக் காப்பாற்றுவது.

10. மராமத்து வேலைகள், ரஸ்தாக்கள், கட்டிடங்கள், பெரிய சிறிய தண்ணீர்ப் பாசனம். டிராம், ரயில், ஜலதாரை, அணைகள்.

ஷரா—இந்தியா கவர்மெண்டார் அனுமதி கொடுக்கும் மட்டில்.

11. கல்வி—பிரதம கல்வி, உயர்தரக்கல்வி, கலாசாலை, கைத் தொழிற் சாலைகள், யூனிவர்ஸிட்டிகள், பால்ய குற்றவாளிகளின் திருத்த சாலைகள், கைத்தொழிற் பள்ளிக்கூடங்கள்.

ஷரா—ஒரு மாகாணத்திற்கு மேல் உதவும் யூனிவர்ஸிட்டிகளையும் சில மன்னர்கள் காலேஜுகளையும் தவிர இந்தியன் யூனிவர்ஸிட்டி ஆக்டைப்பற்றி பிரத்தியேகமாய் யோசிக்கப்படும்.

12. வைத்தியமும் சுகாதாரமும். பொது ஜன சௌக்கியம். ஆஸ்பத்திரிகள், குஷ்ட ஆஸ்பத்திரிகள், பைத்திய ஆஸ்பத்திரிகள், தேக சௌக்கியத்திற்காக ஜனங்கள் அடையும் இடங்கள். வைத்தியம் சம்பந்தப்பட்ட இடங்கள், யாத்திரைக்காரர்கள்.

ஷரா—ரயில்வே ஏற்பாடுகளைத் தவிர.

13. ஸ்தல சுய ஆட்சி. கிராமங்களிலும் பட்டணங்களிலும் பொது ஜனங்களுடைய ஆரோக்கியம், சாவதானம், சௌகரியம் இதுகளுக்கு ஏற்பாடு செய்தல், ஸ்தல அதிகாரிகளை அமைத்தல், வரிகள் போடுதல், கடன் வாங்கல், ரஸ்தாக்கள், பாலங்கள், பரிசல் துறைகள், பொருட் காட்சிகள், தோட்டங்கள், புத்தக சாலைகள், கட்டிட விதிகள், பட்டண அமைப்பு, வீட்டமைப்புச் சீர்திருத்தம், ஓட்டல்கள், வாடகை வண்டிகள், வண்டிகளைப் பதிவு செய்வது, தண்ணீர் சப்ளை. தீப்பிடிப்பதைத் தடுப்பது, ஆகார பதார்த்தங்கள் விக்கிரயம் செய்வதைப்பற்றி விதிகள் ஏற்படுத்துவது, புகை அசௌகரியம், குளிக்கவும் துணி சுத்தம் செய்யவுமுள்ள இடங்

கள், பிரேத அடக்கம், இடுகாடுகளை, ஜலதாரைகள், மிருகங்களை வைத்துக்கொள்ளவேண்டிய விதிகள், முனிசிபல் சர்வே, இப்பொழுதிருக்கும் முனிசிபல் அல்லது சுய ஆட்சி சட்டங்களிலுள்ளவைகள், பின்னும் இந்தியா கவர்மெண்டார் ஸ்தல சுய ஆட்சியில் சேர்க்கப்பட்டிருக்கிறதென்று சொல்லும் விஷயங்கள்.

14. ஓட்டுக்கொடுக்க யோக்யதையை நிர்ணயம் செய்வது, தெரிந்தெடுக்கும் முறை, தெரிந்தெடுக்கும் வட்டங்களை திட்டம் செய்தல்.

15. ஸிவில் நீதி—இருமக் கோர்ட்டுகளுள்பட நீதி செலுத்தல், வக்கீல்கள், சட்ட ரிப்போர்ட்டுகள், ஸ்தலச் சட்டங்கள், ஸ்தலச் சட்டங்களை அர்த்தம் செய்யும் முறைகள், அட்மினிஸ்டிரேட்டர் ஜெனரல் சட்டம் அபிஷியல் டிரஸ்ட்டி சட்டம், தர்ம டிரஸ்டுகள், பைத்தியம், தஸ்தாவேஜுகள் ரிஜிஸ்டர் செய்தல்.

குறு—சட்டம் செய்யும் அதிகாரம் இந்தியா கவர்மெண்டிற்கே இருக்கவேண்டியது. மாகாண கவர்மெண்டுகள் கொண்டு செலுத்த வேண்டியது.

16. கலால், லாகிரி உண்டுபண்ணும் பானங்கள், சாராயம் முதலியன காய்ச்சும் சாலைகளை மேல் பார்ப்பது

17. ஷெடியூல் ஜில்லாக்கள்—மாகாணங்களுக்குள் எல்லை நிர்ணயம் செய்து கொள்வது.

18. நிலம் வாங்குவது.

குறு—இப்பொழுதிருக்கும் இந்தியா கவர்மெண்டு சட்டம் வர்ஜிதமாயிருக்கவேண்டியது. ஆனால் மாகாண கவர்மெண்டுகள் மாறுபாடுகள் செய்யலாமா என்பதை யோசிக்கவேண்டியது.

19. தொழிற்சாலை சம்பந்தமான விஷயங்கள்—தொழிற்சாலைகள், அபாயகரமான வியாபாரங்கள், உள்நாட்டுப் புகைக் கப்பல்கள், பாயிலர்கள், கூலி ஆட்கள் பதிவு, பிராவிடண்ட் நிதிகள், தொ

தொழிலாளிகள் ஆரோக்ய இன்ஷூரன்ஸ், தேச சங்கங்கள், வேலை கற்றுக்கொள்வது, அபாய இன்ஷூரன்ஸ்.

ஷரா—இவைகள் சிருத்தியாக விருத்தியாக.

எலக்ட்ரிசிடி, மண்ணெண்ணெய், வெடிமருந்து, சுரங்கங்கள், லோஹங்கள் பொருட்டுச்சேவை, கைத்தொழில் அபிவிருத்தி, வேலைத் தொழில்கள்.

20. ஐக்கிய சரணம்.

ஷரா—சட்டம் செய்யும் அதிகாரம் இந்திய கவர்மெண்டுக்கே இருக்கவேண்டியது. ஆனால் அந்தச்சட்டத்தில் மாகாண கவர்மெண்டாருக்கு திருத்தங்கள் செய்ய அனுமதி கொடுக்கலாம். மாகாண கவர்மெண்டாரே கொண்டு செலுத்தவேண்டியது.

21 விவசாயசங்கங்கள், பாங்கிகள், இன்ஷூரன்ஸ் முதலான கம்பெனிகள்.

ஷரா—சட்டம் செய்யும் அதிகாரம் இந்திய கவர்மெண்டுக்கே இருக்கவேண்டியது. மாகாண கவர்மெண்டுகளுக்கு இந்திய கவர்மெண்டார் அனுமதிக்குமளவு கொண்டு செலுத்த அதிகாரமுண்டு.

22. சர்க்கார் அச்சுக்கூடம், காகிதம் வகையரா. அச்சிடுவது.

ஷரா—காகிதம் வகையறாவைப்பற்றி இந்திய கவர்மெண்டாருக்குள்ள அதிகாரத்தில், வேண்டிய சாமான்களை வாங்கும் விஷயமும் சம்பந்தப்பட்டது.

23. கணக்கெடுப்பது, ஜனனம், மரணம், விவாகம் இவைகளின் பதிவு, மாகாண கவர்மெண்டார் உபயோகத்திற்காக கணக்குத் தயாரிப்பது

ஷரா—எல்லா மாகாணங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கும் பொருட்டுச் செய்ய இந்திய கவர்மெண்டுக்கு அதிகாரம் இருக்க வேண்டியது.

24. மாகாணங்களுக்குள் குடியேறுதல்.

ஷரா—இந்திய கவர்மெண்டின் ஆதிக்யத்திற்குட்பட்டு.

25. காட்டு மிருகங்களையும் பக்ஷிகளையும் காப்பது. மிருகங்களை குரூரமாய் நடத்துவது.

ஷரா—இந்திய முழுமையிலும் ஓரே மாதிரி நிபந்தனைக்குட்படவேண்டியது.

26. மாகாண கவர்மெண்டார் வசூலிக்கக் கூடியவரிகளை விதிப்பதும் வசூலிப்பதும்.

27. வார்சில்லாத சொத்துக்கள் அறுதி ஐவேஜிகள்.

28. தர்ம ஸ்தாபனங்களை மேல் பார்ப்பது.

29. மோட்டார் வாஹனங்கள்.

ஷரா—இந்திய கவர்மெண்டார் கொஞ்சம் சட்டம் ஏற்படுத்த வேண்டியதவசியம். அத்துடன் முரண்படாத அதிகாரங்கள் மாகாண கவர்மெண்டுகளுக்கிருக்கவேண்டியது.

## மாற்றப்பட்ட விஷயங்களைக் காட்டும்
## II-வது ஜாப்தா.
(212, 213, 238, 240, பாராக்கள்)

1. மாகாண கவர்மெண்டிற்கு வேண்டிய செலவுகளுக்காக வரி ஏற்படுத்தல்.

2. ஸ்தல சுய ஆட்சி. கிராமங்களிலும் பட்டணங்களிலும் அதாவது பொதுஜன ஆரோக்யம், சாவதானம், சௌகரியம், இதுகளுக்கு வேண்டிய ஏற்பாடுகள், ஸ்தல ஸ்தாபனங்களை அமைத்தல், முனிசிபல் வரிகள், கடன்கள், ரஸ்தாக்கள், பாலங்கள், துறைகள், சுங்கம். சந்தை, பட்டி, பொருட் காட்சி, தோட்டங்கள், வெளிப் பிரதேசங்கள், காட்சிக் கட்டிடங்கள், புத்தகசாலைகள். கட்டிட அமைப்பு திட்டங்கள், பட்டண அமைப்பு, வீட்டுத்திருத்தங்கள், அனுமதியில்லாத வீடுகள், வாடகை வண்டிகள், வண்டிகளின் பதிவு, ஜல சப்ளை, தீ வராமல் தடுப்பது, ஆகார பானங்கள் விற்பனைக்கு விதிகள், புகைத் தொந்திரவு பிரேத அடக்கம், குளிக்குமிடங்கள். கிட்டங்கிகள் ஜலதாரைகள், மிருகங்களை வைத்துக்கொள்ளவேண்

டிய முறை, முனிசிபல் சர்வே, பிரசுரங்கள், இப்பொழுதிருக்கும் முனிசிபல் சட்டத்திலும் ஸ்தல சுய ஆட்சி சட்டத்திலும் சொல்லப்படும் விஷயங்கள், பின்னும் சுய ஆட்சியில் அடங்கியதென்று இந்திய கவர்மெண்டார் சொல்லும் எந்த விஷயமும்.

3. ஜனன மரண விவாக பதிவு, பிரேத விசாரணை செய்யும் உத்தியோகஸ்தர், ஸிவில் கிரிமினல் கிராம கோர்ட்டுகள், மாகாண கவர்மெண்டாருக்கு வேண்டிய கணக்குகள் எடுத்தல்.

4. கல்வி. பிரதம கல்வி, இரண்டாந்தரக் கல்வி, கைத்தொழிற் கல்வி,

5. வைத்தியமும், சுகாதாரமும்.

6. விவசாயம்.

7. ஐக்கிய நாணயம்.

8. சில காடுகள்.

9. மீன் பிடிக்கும் ஸ்தலங்களும் அதுகள் சம்பந்தப்பட்ட தொழில்களும். நதிகளின் காப்பு.

10. மராமத்து. ரஸ்தாக்கள், கட்டிடங்கள், கில்லுறை பாசனம், டிராம் சிறு ரயில்கள், ஜலகரணை, அணைகள்.

11. கலால். லாகிரி உண்டுபண்ணும் பானங்களும் வஸ்துக்களும் சாராயம் வகையறா காய்ச்சும் ஸ்தாபனங்களின் மேல் பார்வையுள்பட.

[illegible] ஸ்தாபனங்கள்.

1[illegible]தொழிலையும் ஸ்தல தொழிற்சாலைகளையும் அபிவிருத்தி செய்வது.

14. சில்லரை [illegible]ங்கள் அதாவது காட்டு மிருகங்களையும் பக்ஷிகளையும் காப்பாற்றுவது, மிருகங்களை குரூரமாய் நடத்துவது, சூதாட்டத்தை தடுப்பது, மோட்டார் வாகனங்கள், தஸ்தவேஜுகளை ரிஜிஸ்டர் செய்வது.

15, வோட்டு கொடுக்க உள்ள லாயக்கைப்பற்றின விதிகள், தெரிந்தெடுப்பதற்குள்ள முறையைக் குறிக்கும் சட்டம், தெரிந்தெடுக்கும் சட்டங்களைக் குறிப்பிடுவது.

[illegible] கமிஷன் ரிப்போர்ட்டு செய்தமேல்.